தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டு, சட்ட முன்வடிவு பிரிவு வாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

பிரிவுகள் 2 முதல் 31 வரை பேரவையின் முடிவிற்கு விடப் பட்டு, நிறைவேற்றப்பட்டன.

திருமதி த. ந. அனந்தநாயகி: பில் மூவ் பண்ணி ஒருவரைக் கூட பேசவிடவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான்கு பில்களையும் 12-30 மணிக்கு முடித்துவிட்டுத்தான் பிறகு அர்பன் லேண்டு டாக்ஸ் பில்லுக்குப் போகவேண்டுமென்று ஏற்கெனவே முடிவு எடுத்திருக் கிறோம்.

அட்டவணை பேரவை முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப் பட்டது.

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டன.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா: "1975 ஆம் ஆண்டு சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப் படுத்துதல்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண் 39/1975) சட்டமாக நிறைவேற்றப்பட வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, சட்ட முன் வடிவு சட்டமாக நிறைவேற்றப்பட்டது.

(6) அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(ஆ) 1975 ஆம் ஆண்டு, லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1975-ஆம் ஆண்டு லாஸ்கோ ஸ்டீல்ஸ் லிமிடெட் (நிறுவனத்தைக் கையகப்படுத்துதல்) சட்ட முன்வடிவை (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 40/1975) பேரவையில் ஆய்வுக்கு எடுத்துக் கொள்வதற்கு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.